(2) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

விக்கிரமசிங்கபுரம் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்ட மருத்துவ மனை.

?குறுகிய கால வினா எண். 44—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அம்பை தொகுதியிலுள்ள விக்கிரமசிங்கபுரம் இ.எஸ்.ஐ. மருந்தகத்தில் இ. எஸ். ஐ. திட்டம் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தற்பொழுது எத்தனை மருத்துவர்கள் பணியில் உள்ளனர் ?

(இ) அவர்களில் பெண் மருத்துவர்கள் எத்தனை பேர் ?

(ஈ) குடும்பங்களுக்கு விஸ்தரிப்பதற்கு முன் ஆண் மருத்துவர்கள், பெண் மருத்துவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். வெளி நோய் (out patient treatment) சிகிச்சை மட்டும்.

(ஆ) உதவி மருத்துவர் பதவிகளின் மொத்த எண்ணிக்கை ஏழு. தற்போது ஐந்து உதவி மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள்.

(இ) ஒரு பெண் உதவி மருத்துவர் பணி புரிந்து வருகின்றார்.

(ஈ) ஈட்டுறுதித் திட்டம் விக்கிரமசிங்கபுரத்திற்கு நீட்டிக்கப்பட்டபோது ஆண் மருத்துவர்கள் இரண்டு பேரும், பெண் மருத்துவர் ஒருவரும் ஆக மூன்று மருத்துவர்கள் பணியில் இருந்தார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பைத் தொகுதியில் விக்கிரம சிங்கபுரத்தில் இ. எஸ். ஐ. திட்டம் தொழிலாளர்கள் குடும்பத்திற்கும் நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே அங்கே இருக்கும் இ. எஸ். ஐ. திட்டத்தின் கீழ் 6,500 பேர்களுக்கு அதிகப்படியாக இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அந்த 6,500 குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் அந்த மருத்துவ மனையில் வந்து சிகிச்சை செய்து கொள்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆமெனில், அந்த 6,500 குடும்பங்களுக்கும் சிகிச்சை செய்வதற்கு ஒரு பெண் மருத்துவர் போதுமா என்பதைப் பற்றி அரசு ஏதாவது முடிவு எடுத்து இருக்கிறதா ?

1979 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 40 இடங்களில் குடும்பத்தாருக்கும் இந்த திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறோம். இன் பேஷண்ட்—அதாவது உள்ளிருப்பு சிகிச்சை அளிப்பது தவிர எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்த — எக்ஸ்டென்ட் செய்ய இருக்கிறோம். அதில் விக்கிரமசிங்கபுரம் ஒன்று. இந்த 7 இடங்களில் 5 இடங்கள் நிரப்பப்பட்டு விட்டது. டாக்டர்கள், இரண்டு உதவி மருத்துவர்கள் பதவி காலியாக இருக்கின்றன. அந்த இரண்டு காலியிடங்களையும் நிரப்ப அரசு ஒப்புதல் செய்து, பேனலில் வைத்துள்ளோர்களில் இரண்டு புதிய நபர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6,500 குடும்பங்களினுடைய பெண்களும் அங்கே வந்துதான் சிகிச்சை பெறுகிறார்கள். அப்படி இருக்கும்போது ஒரு பெண் மருத்துவர் போதுமா? இதை அரசாங்கம் பரிசீலிக்க முன் வருமா? ஆகவே காலியான அந்த இரண்டு இடங்களிலாவது பெண் மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈ. எஸ். ஐ. மருத்துவ மனையில் பொதுவாக பெண் டாக்டர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்றும் அவர்களை குறைத்து பொது மருத்துவ மனைக்கு அனுப்பிவிட வேண்டும் என்றும் எனக்கு நீண்ட நாட்களாகவே ஒரு கருத்து இருந்து வருகின்றது. 6 பேர் டாக்டர்கள் என்றால் அதில் 4 பேர் பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் பல நேரங்களில் பல வகைகளில் லீவு எடுத்துக் கொண்டு போக வேண்டிய நிலை ஏற்படுவதால் நெருக்கடி அடிக்கடி ஏற்படுகிறது. ஆனால் இந்த இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அதிகமாக ஒரு பெண் டாக்டர் தேவை என்பதற்கு புள்ளி விவரங்களை கொடுத்து எழுதிக் கொடுப்பார்களேயானால், நல் வாழ்வுத் துறை அமைச்சரோடு கலந்து பேசி, அதிகமாக பெண் டாக்டர்களை நியமனம் செய்ய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனனுடைய கேள்வியே 6,500 க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அதிலே இருக்கிறார்கள், அவர்களுடைய குடும்பங்கள் அனைத்தும் அதிலேதான சிகிச்சை பெற்று வருகிறது. அப்படி இருக்கும்போது ஒருவர் போதுமா என்பது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டாமா என்று கேட்கிறேன். ஒருவர் நிச்சயமாகப் போதாது என்றும் ஆகவே 3 பெண் டாக்டர்களையாவது நியமிக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தை வற்புறுத்துகிறேன். அதைச் செய்ய அரசாங்கம் முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வற்புறுத்தலை நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவருடன் கலந்து பேசி இதைப் பரிசீலனை செய்து ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறோம்.

Price of palm jaggery

* S.N. Q. No. 45— Thiru J James: will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) whether palmyrah jaggery is sold at a very low price and the cost of production is much more than the selling price;

(b) whether there is any proposal under consideration to render help to the Palmyrah tappers by way of giving fire wood at a concessional rate and loan facilities and

(c) whether the Government will come forward to purchase Palmyrah Jaggery giving reasonable price and to export the same to Srilanka where there is good demand for the same

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது :

(அ) தமிழ்நாட்டில் பனை வெல்லம் சராசரியாக ஒரு கிலோ ரூ. 2.40 ஆக விற்கப்படுகிறது. அதன் உற்பத்திச் செலவு கிலோ ஒன்றுக்கு ரூ. 2.00 ஆகிறது . ஆகவே, உற்பத்திச் செலவு விற்பனை விலையைக் காட்டிலும் குறைவாக உள்ளது.

(ஆ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தில் பதநீர் இறக்குபவர்களுக்கு குறைந்த விலையில் விறகு கொடுப்பது பற்றி எந்தத் திட்டமும் இல்லை. ஆனால்' மூலதனச் செலவுக்கும் நடைமுறை மூலதனச் செலவிற்கும் ரூ. 300 லிருந்து ரூ. 350 வரை இவ்வாரியத்தால் கடனாக வழங்கப்படுகிறது. நடைமுறை மூலதனத்தின் ஒரு பகுதியை விறகு வாங்க உபயோகிக்கலாம்.

(இ) இலங்கையில் இந்திய பனை வெல்லத்திற்குத் தேவையிருப்பதாக தகவல் ஏதுமில்லை. இலங்கையில் நல்ல விலைக்கு பனை வெல்லத்திற்குத் தேவை இருந்தால் அந்நாட்டிற்கு பனை வெல்லத்தை ஏற்றுமதி செய்யும் வழிவகைகளைக் காண மாநில பனைவெல்ல சம்மேளனத்தை கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் அறிவுறுத்தும்.